







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2026) சென்னை நந்தனம் ஓம்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 49 வது சென்னை புத்தகக் காட்சியில் நடைபெற்ற விழாவில் சிறந்த சிறுவர் அறிவியல் நூல், கவிதை இலக்கியம், தன்னம்பிக்கை நூல், பதிப்பாளர், புத்தக விற்பனையாளர், குழந்தை எழுத்தாளர், தமிழறிஞர், எழுத்தாளர் ஆகியோருக்கு விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் ஆர்.எஸ். சண்முகம், செயலாளர் எஸ்.வயிரவன், துணைத் தலைவர்கள் நக்கீரன் கோபால், வே.புருஷோத்தமன், சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவின் 'பதிப்பகத் தலைநகரமாக' சென்னை உயர்ந்திருக்கிறது !

# முன்னணி அறிவுச் சமூகமாக தமிழ்ச் சமூகம் இருக்கக் காரணம், தமிழ்மக்கள் என்றும் வாசிப்பைக் கைவிடாமல் இருப்பதுதான்!

### சென்னை புத்தகக் காட்சியில் நடைபெற்ற விழாவில் —

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

*சென்னை,ஜன.21-*

**சென்னை புத்தகக் காட்சியில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, தமிழ்நாட்டின் வாசிப்புத் தளத்தை விரிவுபடுத்த பங்காற்றும் சிறந்த பதிப்பாளர்கள், படைப்பாளர்கள், நூலகர்களுக்கு பப்பாசி விருதுகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் செய்துவரும் சிறப்புகள், புத்தக வாசிப்பைப் பரவலாக்க எடுக்கும் முயற்சிகள் உள்ளிட்டவை குறித்து உரையாற்றினார். 49 ஆண்டுகளைத் தொட்டிருக்கும் சென்னை புத்தகக் காட்சியின் அறிவுப் பணி, பொன்விழா ஆண்டையும் கடந்து, இன்னும் பல நூற்றாண்டுகள் தொடரட்டும் என வாழ்த்தினார்.**

**அப்போது அவர், ``இன்று சென்னை இந்தியாவின் 'பதிப்பகத் தலைநகரமாக' உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையல்ல. இன்று இந்தியாவிலேயே முன்னணி அறிவுச் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருக்கிறது என்றால், அதற்குத் தமிழ்மக்கள் என்றும் வாசிப்பைக் கைவிடாமல் இருப்பதுதான் மிக முக்கியமான காரணம்'' என்று அவர் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்று சென்னையின் முக்கியமான ஒரு அடையாளமாக மாறியிருக்கின்ற புத்தகக் கண்காட்சியில், விருது வழங்குகின்ற சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வது, உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த மேடை எனக்குப் புதிய மேடை கிடையாது, அடிக்கடி இந்த மேடைக்கு பல நிகழ்ச்சிகளுக்காக வருவதுண்டு.

#### பப்பாசி விருதுகள்

சொல்லப்போனால், இந்தப் புத்தகக் கண்காட்சியை நானே சில ஆண்டுகள் திறந்து வைத்திருந்திருக்கிறேன். பல புத்தகங்களை இதே மேடையில் வெளியிட்டிருக்கிறேன். 'கலைஞர் பொற்கிழி' மற்றும் பப்பாசி விருதுகளைச் சில ஆண்டுகள் நானே இங்கே வந்து அளித்திருக்கிறேன்.

முதலில், இரண்டு விஷயங்களுக்காக இந்தப் புத்தகக் காட்சியை நாம் பாராட்டியாக வேண்டும். முதல் காரணம், 49-வது ஆண்டாக இந்தப் புத்தகக் காட்சி இங்கே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1977-ஆம் ஆண்டு, வெறும் 13 அரங்கங்களோடு தொடங்கப்பட்ட இந்தப் புத்தகக் காட்சியில், இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரங்கங்கள் அமைக்கப்பட்டுப் புத்தகங்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. பொன்விழாவைத் தொட இருக்கக்கூடிய சென்னை புத்தகக் காட்சிக்கு முதலில் நாம் அனைவரும் நம்முடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்வோம்.

அடுத்து இந்த முறை, இந்த ஆண்டு புத்தகக் காட்சிக்கு வரும்போது கட்டணம் இல்லாமல், அரங்குகளைப் பார்வையிடலாம் என்று விதிகளில் தளர்வு செய்திருக்கிறீர்கள். அதற்கு வாசகர்கள் சார்பாக உங்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### எனக்குக் கூடுதல் பெருமை

இங்கே அண்ணன் நக்கீரன் கோபால் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார், அவரும் ஒரு பதிப்பாளராக வந்திருப்பதாக. துணை முதலமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் என எத்தனையோ பொறுப்புகள் இருந்தாலும், ஒரு பதிப்பாளராக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது எனக்குக் கூடுதல் பெருமை அளிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி நடத்துகின்ற 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' சார்பாக இதே புத்தகக் காட்சியில் நாங்களும் எங்களின் அரங்கை அமைத்திருக்கிறோம். எங்களின் பதிப்பகம் சார்பாக, இந்த ஆண்டு 25 புத்தகங்கள் வெளியிடப்பட்டு, அவை இந்தப் புத்தகக் காட்சியில் சிறப்பாக விற்பனையாகி வருகின்றன. அதற்கான களத்தை எங்களுக்குத் தந்த இந்த சென்னை புத்தகக் காட்சிக்கு, முதலில் ஒரு பதிப்பாளராக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



#### எங்களுக்கு முன்னோடி

கடந்த நவம்பர் மாதம் இளைஞர் அணியின் சார்பாக, வள்ளுவர் கோட்டத்தில் நாங்கள் 'அறிவுத் திருவிழா' என்கின்ற ஒரு நிகழ்ச்சியை எட்டு நாட்களுக்கு நடத்தினோம். அறிவுத் திருவிழாவை முன்னிட்டுப் பல கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் முக்கியப் பகுதியாக ஒரு வார காலம் புத்தகக் காட்சியையும் நடத்தினோம். அந்தப் புத்தகக் காட்சிக்கு மிகச் சிறந்த வரவேற்பு இருந்தது. அதைப் பார்த்துவிட்டுத் தமிழக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: ``இனிமேல் ஆண்டுதோறும் நீங்கள் இந்தப் புத்தகக் காட்சியை நடத்த வேண்டும், ஆண்டுதோறும் அறிவுத் திருவிழாவைத் தமிழ்நாடு முழுவதும் நடத்த வேண்டும்'' என்று முதலமைச்சர் அவர்களும், எங்களின் கழகத் தலைவர் அவர்களும் எங்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்கள்.

அந்த அளவுக்கு அறிவுத் திருவிழாவை நாங்கள் சிறப்பாக நடத்தி இருக்கிறோம் என்றால், அதற்கு எங்களுக்கு முன்னோடியாகவும் உந்துதலாகவும் இருந்தது இந்த சென்னை புத்தகக் காட்சி என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, அந்த நன்றியுணர்வோடு இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

#### தினமும் ஒரு திருவிழா

இன்று இந்தப் புத்தகக் காட்சியைப் பார்க்கும்போது, மக்கள் இதைப் பற்றிப் பேசுவதைத் தொலைக்காட்சியிலும் செய்தித்தாள்களிலும் பார்க்கும்போது, மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஏனென்றால், முன்பெல்லாம் சென்னையில் விடுமுறை என்றால், அனைவரும் கடற்கரை, வணிக வளாகம், திரையரங்கம் என்று அங்கே மட்டும்தான் செல்வார்கள். ஆனால், இன்று புத்தகக் காட்சி தொடங்கிவிட்டது என்றால், மக்கள் கூட்டம், அதிலும் குறிப்பாக, குடும்பம் குடும்பமாக மக்கள் வருகிறார்கள். தினமும் ஒரு திருவிழா போல, இங்கே கூட்டம் கூடுகிறது. மக்கள் ஆர்வத்தோடு வருகை தந்து பல புத்தகங்களைப் பார்வையிட்டு வாங்கிச் செல்கிறார்கள்.

ஒரு பக்கம் நந்தனத்தில் இந்தப் புத்தகத் திருவிழாவை நம் அரசு நடத்துகிறது. இன்னொருப் பக்கம் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் 'சென்னை சர்வதேசப் புத்தகக் காட்சி' (Chennai International Book Fair) நடத்தப்படுகிறது. நேற்றுதான் முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

#### எழுதி வளர்ந்த இயக்கம்

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இன்று சென்னை இந்தியாவின் 'பதிப்பகத் தலைநகரமாக' உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. இன்று இந்தியாவிலேயே முன்னணி அறிவுச் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருக்கிறது என்றால், அதற்குத் தமிழ்மக்கள் என்றும் வாசிப்பைக் கைவிடாமல் இருப்பதுதான் மிக முக்கியமான காரணம். குறிப்பாக, நம்முடைய திராவிட இயக்கத்தை எடுத்துக்கொண்டால், அது பேசியும் படித்தும் எழுதியும் வளர்ந்த இயக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எனத் தலைவர்கள் மட்டுமன்றி, அந்த இயக்கத்தின் தொண்டர்கள் வரை புத்தகங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒரு காலகட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான இதழ்களை நடத்தியது நம்முடைய திராவிட இயக்கம். எழுத்தை வெறும் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தாமல், மக்களுக்கான பகுத்தறிவையும் முற்போக்குச் சிந்தனையையும் கொண்டு சேர்க்கின்ற சேவையாக எண்ணி திராவிட இயக்கத் தலைவர்கள் செயல்பட்டு வந்தார்கள்.

#### 'கம்யூனிஸ்ட் அறிக்கை'

தந்தை பெரியார் அவர்கள் உலகின் போக்கை மாற்றிய 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யைத் தமிழில் வெளிக்கொண்டு வந்தார்கள். அண்ணா அவர்கள் உலக வரலாற்று வீரர்களுடைய, தலைவர்களுடைய கருத்துகளையெல்லாம் தன்னுடைய தம்பிகளுக்குக் கடிதமாக எழுதினார். அண்ணா அவர்கள் அன்றைக்குப் பற்ற வைத்த அந்த அறிவுத் தீ, இன்று வரை கொழுந்துவிட்டு எரிகிறது.

அதனால்தான் 'தீ பரவுகிறது, தீ பரவட்டும்' என்று சொன்னால் இன்றைக்குக் கூடச் சிலர் பயந்து நடுங்குகிறார்கள். அதேபோல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய நாடகங்களும், இலக்கியங்களும், புத்தகங்களும் தமிழ்நாட்டிற்கு என்று ஒரு தனி அரசியல் பாதையையே உருவாக்கியது.

அறிவு என்பது எப்போதும் வளர்ந்து கொண்டிருக்க கூடிய ஒன்று. 'Learning has no limits' என்று சொல்வார்கள். அதனால்தான் திராவிட இயக்கம் எப்பொழுதுமே புத்தகங்களையும், எழுத்தாளர்களையும், பதிப்பாளர்களையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. கலைஞர் அவர்கள் புத்தகங்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்தாரோ, அதே அளவுக்கு எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வந்தார். அதனால்தான் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயைப் பப்பாசிக்கு அவர் அளித்தார்.

#### கலைஞர் பொற்கிழி விருது

இன்றைக்கு அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியிலிருந்து எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்பாளர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான 'கலைஞர் பொற்கிழி விருது' வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான பொற்கிழி விருதை நம் முதலமைச்சர் அவர்கள் இதே மேடையில் ஒரு வாரத்திற்கு முன்பு வழங்கினார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு வாசிப்பை ஊக்குவிக்கின்ற ஓர் அரசாகத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இன்று சென்னையில் மட்டுமல்லாமல், பல்வேறு மாவட்டங்களிலும் இதே போன்ற புத்தகக் காட்சிகளை நம் அரசு நடத்தி வருகிறது. இந்த சென்னை புத்தகக் காட்சியை நடத்துவதற்கு நம்முடைய அரசு கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல் வைகை, சிறுவாணி, காவிரி ஆகிய இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. எழுத்தாளர்கள் பிறந்த நாளில் தொடர்ந்து கூட்டங்கள், பாராட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. இதழாளர்களுக்குக் 'கலைஞர் எழுதுகோல் விருது', உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள், இலக்கிய மாமணி விருதுகள் எனப் பல்வேறு சிறப்புகள் செய்யப்படுகின்றன. மேலும், உயரிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்குக் 'கனவு இல்லம்' வழங்கும் திட்டத்தையும் நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

#### அண்ணா நூற்றாண்டு நூலகம்

கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டுச் சென்னை கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். கலைஞர் வழியில் நம் தலைவர், முதலமைச்சர் அவர்கள் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். அதுமட்டுமல்ல, திருச்சியில் காமராசர் அறிவுலகம், கோவையில் பெரியார் நூலகம், திருநெல்வேலியில் காயதே மில்லத் அறிவுலகம், சேலத்தில் பாரதிதாசன் அறிவுலகம், கடலூரில் அஞ்சலையம்மாள் அறிவுலகம் என நம்முடைய அரசு பல்வேறு அறிவுலகங்களை, நூலகங்களைத் திறந்து வைக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்த பணி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு நூலகத்தை அமைக்க வேண்டும் என்பதாகும். இன்று கிட்டத்தட்ட 120 நூலகங்களைத் தி.மு.க இளைஞர் அணி தனியாக நடத்தி வருகிறது.

#### பூங்கொத்துக்கு பதிலாக புத்தகங்கள்

என் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் ஒரு நடமாடும் நூலகத்தையும் அமைத்திருக்கிறோம். கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இன்று அந்த நூலகத்தில் பதிவு செய்து அதைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதேபோல, எங்களுடைய கழகத் தலைவர் சொன்னது போல, பொன்னாடைகளையும் பூங்கொத்துகளையும் தவிர்த்துவிட்டு, புத்தகங்களைப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டு இருக்கிறார்கள்.

அப்படி வழங்கப்பட்ட புத்தகங்களைத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு நூலகங்களுக்குப் பரிசாகக் கொடுக்கிறோம். ஆகவே, வாசிப்பை ஓர் இயக்கமாக மாற்றுவதற்கு எங்களால் முடிந்த பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

வாசிப்புக்கு உறுதுணையாக இருக்கின்ற நண்பர்களுக்குத்தான் இந்த விருதுகளை இன்றைக்கு வழங்கியிருக்கிறோம். சிறந்த பதிப்பாளர், சிறந்த நூலகர், சிறந்த புத்தக விற்பனையாளர், சிறந்த எழுத்தாளர் எனப் புத்தகங்கள் உருவாகி, வாசகர்களிடம் சென்று சேரும் வரை உழைக்கின்ற அனைவருக்கும் இன்றைக்கு இங்கே பாராட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஆக்கபூர்வமான பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கக்கூடிய பப்பாசி நிர்வாகிகள் அனைவருக்கும் உங்கள் சார்பாக என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### உங்களுக்குத் துணை

நம்முடைய திராவிட மாடல் அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணையாக இருக்கும். பதிப்பாளர்களுக்கும், படைப்பாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், வாசகர்களுக்கும், விருது பெற்ற அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்தச் சிறப்பான வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் (BAPASI) தலைவர் சண்முகம், செயலாளர் வைரவன், துணைத் தலைவர்கள் நக்கீரன் கோபால், புருஷோத்தமன், பொருளாளர் வெங்கடாசலம், மனுஷ்யபுத்திரன், இமயம், ஹபிசுல்லா, முனைவர் வனஜா, முகேஷ், கடற்கரை, தீபா, லோகமாதேவி, சே.பா.சிவராமன், முனைவர் சுந்தர ஆவுடையப்பன், ஓவியர் டிராட்ஸ்கி மருது, தமிழ்மகன், கவிஞர் வெண்ணிலா உள்பட எழுத்தாளர்கள் கவிஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.